**கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய பதிவுகள் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

முடியுமான அளவு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக

திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்கீடு செய்வதற்காக நிறுவகத்தில் செயற்படும் கணினி நிகழ்ச்சித் திட்ட முறைமை உரிய முறையில் செயற் படாமையால் கணக்கீடு பரிசோதனை மேற் கொள்ளல் கடினமாகியது. | - | நிறுவகத்தின் கணக்கு அலுவல்களுக்குத் தேவை யான அனைத்து தகவல்களும் அடங்கக் கூடிய விதமாக உரிய முறையில் செயற்படும் கணினி கணக்கீட்டு முறைமை நிறுவப்பட வேண்டும். |

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமங்களுடன் தொடர் புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09(35) ஆம் பிரிவின் பிரகாரம் இறுதி இருப்பின் கிரயம் முன்வந்து முன் செல்லல் (FIFO) அல்லது அனுகூல சராசரி (WAC) ஆகிய கிரய முறைமையை பயன்படுத்தி தீர்மானிக்க வேண்டிய போதிலும் நிறுவகம் அந்த முறைமைகளை பயன் படுத்தாமல் இலகு சராசரிக் கிரயத்தின் படி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | காணப்படும் கணினி முறைமை இலகு சராசரி கிரய முறைமையை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பட்டிருந்ததுடன் FIFO அல்லது WAC பிரகாரம் இருப்புக் கணிப்புகள் மேற்கொள் வதற்கு வசதிகள் காணப்படவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்தின் நுகர்வுப் பொருட் கள் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பௌதீக இருப்பு கணிப்பீட்டு அறிக்கை யின் படி ரூபா 14,690,110 பெறுமதியான இருந்த போதிலும் அது ரூபா 15,450,513 என இறுதிக் கணக்குகளில் காட்டப் பட்டமையால் பண்ட இருப்பின் பெறுமதி ரூபா 760,403 தொகை மிகையாகக் காட்டப்பட்டுள்ளது. | பௌதீக இருப்புக் கணிப்பீட்டு அறிக்கை யின் படி பெறுமதி மற்றும் நிதிக்கூற்றுக் களில் காட்டப்பட்டிரு ந்த பெறுமதி இடையே வித்தியாசத்துக்கான காரணத்தை பகுப்பாய்வு செய்து இணக்க அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் அவற்றுக்குரிய அறிக்கையுடன் இணக்கஞ் செய்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாலபே ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கட்டிடம் அமைந்துள்ள காணியின் கிரயம் ரூபா 40,000,000 கட்டிடங்கள் என 2017 ஆண்டின் போது காட்டியதை திருத்தியிருந்த போதிலும் அந்தக் காணியின் கிரயத்தின் மீது நூற்றிற்கு 5 இனால் பெறுமானத்தேய்வு கழித்திருந்தவை சரிசெய்திருக்க வில்லை. இதன் காரணமாக திரண்ட பெறுமானத் தேய்வு ஒதுக்கத்தின் பெறுமதி ரூபா 2,000,000 இனால் மிகையாகவும் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ஒதுக்கத்தின் ஆரம்ப மீதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டமையால் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 2,000,000 இனால் மிகையாக கணக்கீடு செய்யப் பட்டிருந்தது. | அடுத்த வருடம் கட்டிட பெறுமானத்தேய்வு உரிய முறையில் சீராக்கல் செய்வதற்கு குறித்துக் கொண்டேன். | நிதிக்கூற்றுகளின் மூலம் சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | விஞ்ஞான தொழிநுட்ப ஆய்வு அமைச்சின் இராஜாங்க அமைச்சர் அலுவலகம் மற்றும் தொழிநுட்ப சாட்டுதல்கள் அலகு பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகக் கட்டிடத்தில் நடாத்தப்படுவதால் ஒரு மாதத்திற்கு ரூபா 1,368,050 தொகைக்கான வாடகை ஒன்று அறவீடு செய்வதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 ஜனவரி 01 முதல் செப்தெம்பர் 26 திகதி வரை 09 மாதங்களுக்காக ரூபா 12,312,450 தொகை நிறுவகத் திற்கு பெறவேண்டி இருந்த போதிலும் அவ்வாறு பெற வேண்டிய வாடகை வருமானம் என கணக்கீடு செய்திருக்க வில்லை. | விஞ்ஞான தொழில் நுட்ப ஆய்வு அமைச்சுக்கு தேவையான இடவசதிகள் வழங்கு வதற்காக 2017 ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய பெறுமதி இதுவரை கிடைக்கப்பெறாமை மற்றும் வரிசை அமைச்சில் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகையாகக் காணப்பட்டதால் தேறப்படாவிடின் நிறுவகத்தின் வருமானம் மிகையாக காட்டப்படுவதனால் வாடகை வருமானம் பணமாக கிடைத்த வுடன் கணக்கீடு செய்யப்படும். | நிறுவகத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் உரிய நிறுவனங்களில் இருந்து அறவீடு செய்வதற்காக மற்றும் அந்த வருமானத்தை நிதிக்கூற்றுக்கள் மூலம் சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது பணிக் கொடை மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவு ரூபா 40,039 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தமையால் காசுப்பாய்சல் கூற்றில் செயற்பாட்டுத் தொழிற்பாடுகள் மூலம் உருவாகிய பணத்தின் பெறுமதி ரூபா 40,039 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது, | காசுப் பாய்ச்சல் கூற்றுடன் தொடர்பு டைய உரிய பாய்ச்சல்கள் தொடர்பாக மீண்டும் பகுப்பாய்வு செய்வதற்காக குறித்துக் கொண்டேன். | நிறுவகத்தின் காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதி தொழிற்பாடுகள் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சலை கணிக்கும் போது நடைமுறை ஆண்டின் வட்டிப் பெறுவனவுகள் ரூபா 23,798,804 தொகை எனினும் அது ரூபா 20,569,727 தொகை என காட்டப்பட்டமை யால் நிதிதொழிற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சல் ரூபா 3,229,077 தொகை குறைவாகக் காட்டப் பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்று தொடர்புடைய உரிய பாய்ச்சல்கள் தொடர்பாக மீண்டும் பகுப்பாய்வு செய்வதற்காக குறித்துக் கொண்டேன். | நிறுவகத்தின் காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

இது தொடர்பாக கீழ்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| விடயம் | | நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | | |
| (அ) | சேவை வழங்கல் வருமானம் | 290,335,090 | 294,575,089 | 4,239,999 | வெளியிடப்பட்ட வருமானம் மற்றும் வரிக் கூற்றுக் களின் படி வருமானத்தின் வித்தியாசத்திற்கான காரணம் ஏனைய செயற்பாட்டு வருமானம் ஆகும். அதனை நிதிக் கூற்றுக்களில் வேறாக காட்டப் பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அவ் விடயங்களுடன் தொடர்புடைய ஏனைய பெறுமதி களுடன் இணக்கஞ் செய்ய வேண்டும் எனவும் மற்றும் வித்தியாசங்களு க்கான காரண ங்களை சரியாக சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | 3 விடயங் களுக்குரிய நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 1,393,292,119 | 1,368,405,454 | 24,886,665 | இது தொடர்பாக மேலும் தேடிப் பார்த்து உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அவ் விடயங்களுடன் தொடர்புடைய ஏனைய பெறுமதி களுடன் இணக்கஞ் செய்ய வேண்டும் என மற்றும் வித்தியாசங்களுக் கான காரணம் சரியாக சமர்ப்பிக்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்கு

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல வருட காலமாக நிதிக்கூற்றுக் களில் அடங்கியுள்ள 10 விடங்களைக் கொண்ட கூட்டுத் தொகை ரூபா 3,433,566 இற்கான கடன்பட்டோர் மீதி மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக கடன் பட்டோரை அறிவுறுத்தி உள்ளதுடன் அறவீடு செய்வதற்கு முயற்சி எடுத்துள்ளோம். இது வரை குறிப்பிட்ட பெறுவனவுகள் கிடைத்திருக்கவில்லை. | நிறுவகத்திற்கு அறவிடப்பட வேண்டிய கடன் தொகை அறவீடு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | பல வருட காலம் முதல் அறவிடப்பட வேண்டிய வெளிநாட்டு புலமைப் பரிசில் களுக்காக மேற்கொள்ளப்பட்டி ருந்த உடன்படிக்கைகளை மீறிய 18 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 7,610,032 இற்கான தொகை ஒன்று காணப்பட்டதுடன், இந்தப் பணத்தை அறவீடு செய்வதற்காக நிறுவகத்தினால் முறையான வேலைத் திட்டமொன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. | 15 ஆண்டுகளில் உடன் படிக்கையை மீறிய 17 உத்தியோகத்தர்களிடம் இருந்து குறித்த பணத்தை அறவீடு செய் வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் போது அந்த உத்தியோகத்தர் கள் நாட்டை விட்டு வெளியே சென்றிருந்தனர். அவர்களின் அநேகமான பிணையாளர்கள் நாட்டை விட்டு வெளியே சென்றிருந்ததுடன் சிலர் உயிருடன் இருக்க வில்லை. உடன்படிக்கை மீறிய உத்தியோகத்தர்களின் காலப்பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது. 30 வருடத்தை மிகைத்த உத்தியோகத்தர் 04, 20 வருடத்தை மிகைத்த உத்தியோகத்தர் 08, 10 வருடத்தை மிகைத்த உத்தியோகத்தர் 06 ரூபா 3,789,640 தொகை பெறுமதியான உடன் படிக்கையை மீறிய பெண் உத்தியோகத்தர் தொடர்பாக உரிய நடவடிக்கைக்காக சட்டமா அதிபர் திணைக்களத் தினால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. | வெளிநாட்டு புலமைப் பரிசில் உடன்படிக்கைகளை மீறிய உத்தியோகத்தர் களிடம் நிதி அறவீடு செய்வதற்காக முறையான வேலைத் திட்டம் ஒன்று செயற் படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய வியாபாரக் கடன் மீதி ரூபா 29,465,485 இற்கான தொகையில் 06 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டிய 304 கடன் மீதிகள் காணப்படுவதுடன் அதன் பெறுமதி ரூபா 9,302,126 தொகை ஆகும். | 2005 ஆண்டுக்கு முன்னர் இருந்து கணக்குகளில் காட்டப்பட்ட மதிப்பளிக்கப் படாத காசோலைகள் மற்றும் ஏனைய கடன் பட்டோர் மீதிகளுக்காக பல சந்தர்ப்பங்களில் மீதி களை உறுதிப்படுத்தும் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் உரிய தரப்பினரிடம் அதற்கான பதில் கிடைத்திருக்க வில்லை.<br><br>இதன் காரணமாக அந்த மீதிகளின் பெறுமதிகளை பதிவழிப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் மற்றும் ஆளுகை சபையின் அங்கீகாரத்தை பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவகத்திற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 09 வருடங்கள் முதல் 02 வருட காலப்பகுதி வரை காலவீச்சில் காணப்பட்ட 09 விடயங்களைக் கொண்ட ரூபா 7,951,560 இற்கான பெறுமதி உடைய அட்டுறுச் செலவுகள் தீர்ப்பதற்காக அல்லது அது தொடர்பான பொறுப்பு ஒன்று காணப்படாவிடின் புத்தகங்களில் இருந்து பதிவளிப்பதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த 9 விடயங்களில் ஒரு விடயம் ரூபா 6.8 மில்லியன் தொகை ஆகிய ஊழியர் நிலுவைச் சம்பளம் மற்றும் படிகள் கொடுப் பனவு தொடர்புடையவை அவை அடிக்கடி பயன்படுத்தப்பட்டு உரிய கொடுப்பனவு செய்யப் பட்டுள்ளது. அதன் மீதி தொடர்பாக மனிதவள பிரிவுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய விடயங்களுடன் தொடர்பு டைய பணம் மீண்டும் அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் இனிவரும் காலத்தில் எடுக்கப்படும். | அட்டுறுச் செலவுகள் தொடர்பாக விபரங்களை பெற்று தீர்ப்பதற்கு அல்லது அவ்வாறின்றேல் கணக்குகளை சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை கள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2016 ஜனவரி 08 ஆம் திகதிய மற்றும் 1/2016 திறைசேரிச் செயலாள ரின் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | அரசுக்கு தேவையான விதத்தில் அவசர சேவைகள் நிறைவேற்று வதற்காக 60 நாட்களை மிகைக்காதவாறு குறுகிய கால அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு அதற்காக கொடுக்கக்கூடிய உச்ச தொகை ரூபா 60,000 தொகை என காட்டியிருந்த போதிலும் அதன் மீது கவனம் செலுத்தாமல் நிறுவகத்தின் 19 உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக சபை அங்கீகாரத்தின் மீது ரூபா 10,299,805 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்பு செய் முறையில் காணப்பட்ட தாமதத்தினால் நிறுவக த்தின் செயற்பாட்டு அலுவல்களை நிறைவேற்றுவதற்காக நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன் சாட்டுதல் அடிப்படையில் ஊழியர்கள் சேர்க்கப்பட்டார்கள். அது நிர்வாகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைக்காதவாறு மேற்கொள்ளப்பட்டது. | திறைசேரி சுற்றறிக்கையின் அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 1,819,200 தொகைக்கான 04 வங்கிக் கணக்கு மீதிகள் செயற்படாத வங்கிக் கணக்குகள் என 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் பேணப்பட்டு வந்துள்ளது. | இந்த வங்கிக் கணக்குகள் சின்டெக் செயற்திட்டம், கெயார் செயற்திட்டம், ஈஈபீ எக்ஸ் ஆகிய செயற்திட்டங் களைச் சேர்ந்தவை ஆகும். இவற்றில் சில கணக்குகள் செயற்படுகின்றன. உரிய தரப்பினரின் கோரிக்கையின் மீது சில நிதியங்கள் மீண்டும் வழங்க வேண்டியுள்ளது. | செயற்படாத நடைமுறைக் கணக்குளை மூடி அந்த பணத்தை தாபன விடயங் களுக்காக பயன்படுத்த வேண்டும். |

### 1.9 வரி பிரமாணங்களுடன் இணக்கமின்மை

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பெறுமதி கூட்டியவரி பெறுமதி (VAT) மற்றும் பொருளாதார சேவைக் கட்டணம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | இந்த வங்கிக் கணக்குகள் சின்டெக் செயற்திட்டம், கெயார் செயற்திட்டம், ஈஈபீஈ எக்ஸ் ஆகிய செயற்திட்டங் களைச் சேர்ந்தவை ஆகும். இவற்றில் சில கணக்குகள் செயற்படுகின்றன. உரிய தரப்பினரின் கோரிக்கையின் மீது சில நிதியங்கள் மீண்டும் வழங்க வேண்டியுள்ளது. | வரி செலுத்துவது தொடர்பான அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,252,426 மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,508,341 மிகையாகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 16,760,767 இற்கான வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு செயற்பாட்டு வருமானம் அதிகரித்தல் பிரதான காரணமாகியிருந்தது.

### 2.2 விகிதாசார பகுப்பாய்வு

2017 ஆம் ஆண்டின் நடைமுறை விகிதாசாரம் 2.28:1 தொகையாக இருந்ததுடன், 2018 ஆம் ஆண்டில் அது 2.76:1 ஆக இருந்தது. 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் தொழிற்படு மூலதனம் வளர்ச்சி ஒன்றைக் காட்டியது. வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகள் அதிகரித்தல் இந்த வளர்ச்சிக்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் படி ஆண்டின் போது ரூபா 294,576,000 தொகை பெறுமதியான நடைமுறை அல்லாத சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 திகதி அளவில் அவற்றில் ரூபா 35,150,000 தொகை பெறுமதியான சொத்துக்கள் அதாவது மொத்தப் பெறுமதியின் 11.93 சதவீதம் மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அந்தக் கொள்வனவின் ரூபா 3,608,328 தொகை பெறுமதியான சொத்துக்கள் மாத்திரம் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிறுவகத்திற்கு கிடைத்திருந்தவுடன் மீதியான ரூபா 31,541,772 தொகை சொத்துக்களுக்காக பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அப் பெறுகைகள் பெறுகை செய்முறையின் ஆரம்பக் கட்டத்தில் இருந்தது. | கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவகம் 2018 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த பெறுகைச் செலவு ரூபா 350 மில்லியனாக காணப்பட்டதுடன் உள்ளவாறான செலவுகள் ரூபா 250.2 மில்லியன் தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் கைத்தொழில் தொழிநுட்ப பெறுகை களின் முன்னேற்றம் 71.5 சதவீதம் என குறிப்பிட விரும்புகின்றேன். | ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் படி அந்தப் பெறுகை களை மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பெறுகைகள் மேற் கொண்டுள்ள பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் உரிய காலத்தில் நிறுவகத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் உட்பட 13 பதவிகள் பலவருட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட தென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.<br>03 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு 2017 ஆகஸ்ட் 20 திகதி பத்திரிகை விளம்பரம் செய்யப் பட்டதுடன், 2018 திசெம்பர் 31 திகதி வரை ஆட்சேர்ப்பு மேற் கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சிரேஷ்ட தரச் சான்றுபடுத்தும் உத்தியோகப் பதவிக்காக நிறுவகத்தில் 2018 ஜுலை 10 திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபை தீர்மான த்தின் படி 2017 ஆகஸ்ட் மாதம் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்தை மீண்டும் பிரசுரிக்க தீர்மானிக்கப்பட்டதுடன் 2018.07.12 திகதி மீண்டும் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டது. அந்த அறிவித்தலின் பிரகாரம் 36 பதவிகளுக்காக வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், நிர்வாகத்தின் தேவை மீது முக்கியத்துவம் செலுத்தி பல பதவிகளுக்காக தற்போது ஆட்சேர்ப்பு மேற் | நிறுவகத்தின் அலுவல்கள் தடைகள் இன்றி நடாத்து வதற்காக பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கொள்ளப்பட்டிருந்தது. சிரேஷ்ட தர சான்றுபடுத்தும் உத்தியோகத்தர் பதவிக்காக எதிர்காலத்தில் நேர்முகப் பரீட்சை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br>சிரேஷ்ட கணினி முறைமை பொறியியலாளர் பதவிக்காக எதிர்காலத்தில் நேர்முகப் பரீட்சை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br>சந்தைப்படுத்தும் உத்தியோகத் தர் பதவிக்காக 2018.10.26 திகதி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதுடன் அந்தப் பதவிக்காக தெரிவு செய்யப் பட்ட விண்ணப்பதாரிக்கு 2018.12.17 திகதி முதல் நியமனம் வழங்கப்பட்டிருந்த போதிலும் காலநீடிப்பு கோரியிருந்ததால் 2019.02.14 திததி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. | |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி பல வருட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக (2014.10.12, 2015.01.04 மற்றும் 2016.09.03 நாட்களில்) பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட போதிலும் அதற்காக தகைமையுள்ள விண்ணப்பங்கள் கிடைத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் 2018.07.12 திகதி மீண்டும் பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்ட துடன் எதிர்காலத்தில் நேர்முகப் பரீட்சை நடாத்துவதற்கு உள்ளது. | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக் காக உத்தியோகத்தர் ஒருவர் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |